தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலையிதழ்



அன்றைய நாள் வருமோ?

நட்ட நடுத்தெருவில் —தம்பி
நால்வர் நடக்கையிலே —நல்ல
வெட்ட வெளிச்சத்திலே —பெரும்
வீரர் எதிரினிலே —கடை
கெட்ட இழிசெயல்கள் —கொடுங்
கீழ்மை இருள்வினைகள் —பழி
சொட்ட நடக்குதடா —வெளிச்
சொல்ல முடிவதில்லை! —பார்,
நட்ட நடுத்தெருவில்!

பட்டப் பகலினிலே —இப்
பாழ்மை நடக்கையிலே —இங்கு
நட்ட நடுஇரவில் —தம்பி
நால்வரில் லாப்பொழுதில் —முன்
திட்டமிட் டேபலர்செய் —பெருந்
தீமையைக் கேட்பவர்யார்? —பலர்
கொட்டங்கள் என்னசொல்வேன்? —இழி
கூத்தை எவ் வாறுரைப்பேன்? —அட
பட்டப் பகலினிலே!

(தொடர்ச்சி: அடுத்த பக்கம்)

குரல்: 6, இசை: 3.
விலை: 25 காசு.

பொட்டல் பெருங்காடே —முள்
போர்த்த புதர்நிலமே! —நிலை
கெட்ட தமிழ்நாடே! —வெறுங்
கீழ்மை மணல்மேடே! —உனைத்
திட்டி நெரிப்பதற்கும் —அறத்
தீய்த்துப் பொசுக்குதற்கும் —மனம்
எட்டிஎட் டிப்பாயும் —தமிழ்
ஏக்கந் தடுத்துவிடும்! —ஓ!
பொட்டல் பெருங்காடே!

செங்கட் புலிபாயும் —மருள்
சேர்ந்த பெருங்காடும் —பெருங்
கங்குல் நிறைந்திருக்கும் —மலைக்
கற்புழை நீள்முழைஞ்சும் —வள்ம்
பொங்கும் பசுஞ்சோலை —எனப்
பூரிக்கச் செய்கையிலே —பழி
தங்கும் தமிழ்நிலமே! —உனைத்
தாழ எண்ணும் உளமே! —ஓ!
தண்டமிழ்த் தாய்நிலமே!

எண்ணப் பசுஞ்சுவடும் —அட
எண்ணத் தொலைவிலதாம் —பல
வண்ணப் பெரும் புகழும் —அக
வாழ்வும் புற மறமும் —என்
கண்ணிலே நீருகுக்கும் —பழங்
காட்சிக் குளந்துயிலும்! —இன்று
புண்ணில்வே லிட்டதைப்போல் —இழி
போக்கிற் குளம்வெதும்பும்! —ஓ!
புன்மைத் தமிழ்நிலமே!

அன்றைய நாள்வருமோ! —தமிழ்
ஆண்டிடுமோ மீண்டும்? —அட
இன்றைய புன்மையெல்லாம் —நிலை
இற்றிற்றுச் செத்திடுமோ? —உயிர்க்
கன்றுக்குப் பாலருந்தி —அகக்
காட்சிக்கு மீட்சிதரும் —எனை
வென்ற தமிழ்க்குயிலே —செயல்
வீழ்ந்த தமிழ் மறமே —சொல்
அன்றைய நாள் வருமோ?

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-6. | தி. பி. ௨௰௩. மேழம். ஏப்ரல்–மே-72 | இசை-3

நுண்ணறிவு.

இவ்வுலகில் நாம் இழந்த பின் திரும்பப் பெற முடியாதவற்றுள் காலமும் ஒன்றாகும். காலத்தைத் தக்கபடி பயன் படுத்தாது விட்டவர்களிற் பலர் பிற் காலத்தில் "காலத்தை வறிதே பாழாக்கி விட்டோமே" என்று வருந்துதலை நாம் காணலாம்.

இளமைப் பருவத்தில் உடலும், மூளையும் மென்மையாக இருக்கும். உள்ளம் கள்ளங் கவடின்றிப் பளிங்கு போல் தூய்மை யாகவும் கவலையின்றியும் இருக்கும். ஆகவே இப் பருவத்தில் அறிவைப் பெருக்கிக் கொள்ளுதலும் ஆற்றலை வளர்த்துக் கொள் ளுதலும் எளிது. ஆனால், அகவை முதிர முதிர உடலும் மூளையும் வன்மையாகி விடும். உள்ளமோ அழுக்காறு, அவா, வெகுளி, முதலிய அழுக்குகள் சேரப்பெறும்; கவலையின் இருப்பிடமாகவும் ஆகிவிடும். முதிர்ந்த அகவையில் ஒருவர் கற்பனவும் கேட்பனவும் இளமைப் பருவம் போல் அத்துணை எளிதாகவும், தெளிவாகவும் பதியா. அறிவு இல்லாதவர்க்கு இவ்வுலகம் ஒரு சிறைக் கூடம் போலத் தோன்றும். அறிவுடையார்க்கோ இவ் வுலகம் ஒரு விளை யாட்டரங்கம் போலவும், நாடக மேடை போலவும் காட்சி யளிக்கும்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

ஆகவே இளைஞர்களாகிய நீங்கள் கிடைத்தற்கு அரிய இவ்விளம் பருவத்திலேயே அறிவையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ளுதலில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

கற்றறிவு, பட்டறிவு, பகுத்தறிவு, நுண்ணறிவு, மெய்யறிவு முதலியனவாக அறிவு பல தரப்படும். அவை யாவற்றுக்கும் நுண்ணறிவே அடிப்படை யானதும் இன்றியமையாததும் ஆகும்.

நுண்ணறிவைப் பெருக்கிக் கொள்ளுதற்குப் பள்ளி, கல்லூரி களும் பல்கலைக் கழகங்களும் மட்டும் போதுமானவையல்ல. ஆர்வமும் அயரா முயற்சியுமே இன்றியமையாதவை.

நாம் காணும் ஒவ்வொரு பொருளையும், அவை எத்துணைச் சிறியவை யாயினும் பெரியவை யாயினும் நன்கு துருவித் துருவி ஆராய்தல் வேண்டும். அவற்றின் அமைப்பையும் அவற்றால் உண் டாகும் விளைவுகளையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். நம் புலன் களிற் படும் ஒவ்வொன்றும் நமக்கு எத்தனையோ அறிவை ஊட்ட வல்லன.

ஒரு வண்ண நறுமலரைப் பாருங்கள்! அஃது அரும்பு, முகை, மொட்டு, போது என்று எத்தனைப் படி நிலைகளைக் கடந்து வந்திருக் கிறது? அதன் இதழ்கள் எத்துணைத் திருத்தமாகவும் அழகாகவும் அமைந்துள்ளன? அதனின்றும் வெளிப்படும் நறுமணம் எவ்வளவு இனிமையாக இருக்கின்றது? வண்டுகளைத் தன்பால் ஈர்ப்பதற்கு மணமும் வண்ணமுமே யல்லவா கரணியங்கள்? மலரின்கண் உள்ள தேனின் சுவைக்கு ஈடானது இவ்வுலகில் வேறு உண்டா?

இவ்வாறே ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து வியப் படைவோமாயின், அவ் வியப்பே மேன்மேலும் ஆராய வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டும். ஆர்வமும் முயற்சியும் உள்ளார்க்கு ஆகாததென்று ஒன்றுமே இல்லை. இளம்பருவத்திலேயே நுண்ணறிவை வளர்த்துக் கொள்ள முயலுங்கள்!

—இறைக்குருவன்.

பிழை திருத்தம்

0 சென்ற இதழ் (குரல்: 6, இசை: 2) அட்டைப் பாட்டில் "ஊஞ்சல் தூலிகை" என்றிருப்பதை "ஊஞ்சல் தூலிகள்" என்று திருத்திக் கொள்க.

0 'கழுதை அழுத கதை' – 1117–ஆம் அடியில் 'அன்பரீர்' என்பதை 'அன்பீர்' என்றும்; 1135-ஆம் அடியில் 'இடதுகை' என்பதை 'இடக்கை' என்றும் திருத்திக் கொள்க. —அமைச்சர்.

கழுதை அழுத கதை

துரை. மாணிக்கம்.

பெட்டைக் கழுதைக்குப்
　　பேச முடியவில்லை!
கட்டைக் குரலால்
　　கனைத்துச் சரிசெய்து,
"வல்விலங்குப் பேரரசே!
　　வந்திருக்கும் நல்விலங்கீர்!
சொல்விளங்காப் புல்லியனைச்
　　சொல்லென்றார் நம்மரசர்!"

என்ன உரைத்திடுவேன்?
　　ஏதுமில்லாப் பேதையள் நான்!
தின்ன உறங்கத்
　　திரிந்தலையும் வாழ்க்கையர் நாம்!
சொன்னாலும் கேட்டாலும்
　　சோர்வுமிகும் நம்கதையில்!
என்னவோ என்கதையில்
　　எள்ளளவும் இன்பமில்லை.

சாகாமல் வாழ்ந்து
　　சலித்துப் புளித்தவள், நான்!
வேகாத நெஞ்செனக்கு!
　　வீழ்ந்துபடாக் கல்லுடலாள்!

இன்னபடி யால்தானே
　　இங்குவந்து நான்சேர்ந்தேன்!
அன்னபடி வந்ததிலோ
　　ஆழாக்கும் இன்பமில்லை!
ஒன்றேஒன் றென்றே
　　உலக்கைக் கொழுந்தாக-

நன்ருய் மதர்மதர்ப்பாய்–
நான்வளர்த்த பொன்மகளைப்
பாதி வழியில்
பறிகொடுத்த முண்டம்நான்!
ஏதிலியென் ஞேடு, ஓர்
எருது துணையாக
வந்திருந்த தத்துணைக்கும்
வாய்க்கரிசி போட்டவள், நான்!

நொந்திருந்த என்னைத்தான்
நுங்கள் விலங்கரசர்
காத்துக் கரைசேர்த்துக்
காதாரப் பாராட்டிச்
சீத்துப்பூத் தென்று, இச்
சிறியவளைத் தன் அமைச்சாய்க்
கொண்டையத்தில் தூக்கிக்
குந்தவைத்து விட்டார்கள்!
பண்டைப் பழம்பிறப்பு
பாதியிலே தீர்ந்துபோய்ப்
புத்தம் புதுப்பிறப்பாய்
வந்து புலர்ந்து விட்டேன்!
நித்தமினி உங்களுடன்
நேயப் புதுவாழ்க்கை
வாழ்வதற்கே எண்ணி விட்டேன்!
நம்மின் வருங்காலம்
தாழ்வின்றிப் போகும், இனி!
தாழ்ச்சியுற மாட்டோம், நாம்!

காட்டு விலங்கினமே
என்ருலும் கற்றுயர்ந்த
நாட்டுமக்கள் தம்மிலும்நாம்
நல்லஇனம், நல்ல மனம்,
நல்லரசு, நல்லநெறி
நல்லகுடி — என்றபடி
எல்லாரும் பேசி
இறும்பூது கொள்ளும்படி –
கட்டமைத்துக் கொண்டு
கடமையினை மேற்கொண்டு

திட்டமிட்டு வாழ்ந்திடுவோம்!
தீங்கின்றி நாம் மகிழ்வோம்!
ஓங்குயர்ந்த நல்லன்பீர்!
ஒப்புகின்றீர் தானே?-என்று
ஏங்குகின்ற நன்னெஞ்சால்
எக்களித்துக் கேட்டிடவே
ஆங்கிருந்த மாக்களெல்லாம்
ஆம் ஆம் என் றொப்பினவே!
தீங்கிறந்த நல்லுளத்துத்
தென்னாட்டுப் பெண்கழுதை
பின்னும் குரலுயர்த்திப்
"பேரன்பு சான்றவரே!
முன்னர்யான் வாழ்ந்திருந்த
ஊரின்– முழுக்கதையை–
நாமறிந்து கொண்டால்தான்
நல்ல அரசமைக்க
ஏமநெறி நாம்பெறுவோம்"
ஏன்றுணர்த்தி மேலுரைக்கும்! (-தொடரும்)

ஏதிலிச் சிறுவர்களுக்குப் புகலிடம்.

திரு இராமகிருட்டிண குடிலில் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம், படிப்பு (உயர்நிலைப்பள்ளி வரை) தொழிற் பயிற்சி ஆகியன யாவும் முற்றும் இலவயமாய் வழங்கி ஏதிலி(அனாதை)ச் சிறுவர்களைக் காப்பாற்றி வருகிறோம்.

ஆகையால், திக்கற்ற சிறுவர்கள் வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் தாயும், தந்தையும் இருவருமேயில்லாத ஏழைச் சிறுவர்களைப் பற்றி மட்டும் இங்கு முதலில் கடிதம் எழுதினால் அதற்கான அச்சுப் படிவங்கள் அனுப்பி வைக்கப்படும். சூன் மாதம் முதல் பக்கல் பள்ளி திறக்கப்படுவதால், தொடர்புள்ளவர்கள் இப்போதிருந்தே வேண்டுகோள்களை அனுப்பி வைத்தால்தான் ஆய்வு செய்து, முடிவுக்கு வரக் காலம் சரியாயிருக்கும். முதல் வகுப்பு முதல் ஒன்பதாவது வகுப்பு வரை சிறுவர்கள் மட்டுமே சேருவதற்கு வேண்டுதல் செய்யலாம். தாய் தந்தையரில் எவரொருவர் இருந்தாலும், சிறுமிகளாயிருந்தாலும் வேண்டுகோள் செய்யாதீர்கள். கீழ்க்காணும் முகவரிக்கு எழுதினால் நெறிமுறைப் படிவம் அனுப்பி வைக்கப்படும்.

தலைவர்,

திரு. இராமகிருட்டிண குடில்,

திருப்பராய்த்துறை (அஞ்சல்,) திருச்சி மாவட்டம்.

'தமிழ்ச்சிட்டு'த் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ(ஆ) வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்: கடலூர்-1.
2. காலமுறை: திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: மா. தாமரை.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1
4. வெளியிடுவோர் பெயர். திரு. பெஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5. ஆசிரியர் பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். } திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—5—72 }
கடலூர்-1. }

—பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

---

0 **சிறுவர்களே! சிறுமியர்களே!**

உங்களுக்கான முத்துப் பாடல்கள்! 0
உங்கட்கு உணர்வூட்டுவன! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன! 0

0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல்!

0 அமிழ்தப்பேழை!

வெளி வர விருக்கின்றது! 0
வாங்குவதற்கு அணியமாயிருங்கள்! 0

0 உங்கள் பெற்றோரிடம்
இப்பொழுதே சொல்லி வையுங்கள்!

பள்ளிப் பறவைகள்

(முதல் தொகுப்பு)

ஆசிரியர்: **பெருஞ்சித்திரன்** *(துரை-மாணிக்கம்)*

ஏராளமான எழிற்படங்களுடன் அச்சாகி வருகின்றது!
விலை, விளக்கங்கள் பின்னர்!

முத்துமொழிகள்

(தொகுப்பு: இரா. நா. கலைமகள்)

0 ஒரு மாந்தனுடைய தலையாய தோழர்கள், அவனுடைய பத்து விரல்களே. —இராபர்ட் கோலியர்.

0 நீ பிறருக்கு எவ்வாறு அறம் வழங்குகின்றாயோ, அவ்வாறே பிறரும் உனக்கு அறம் வழங்குவார்கள். —ஏசு கிறித்து.

0 எந்த இடத்தில் நம்பிக்கை இல்லையோ, அந்த இடத்தில் முயற்சி இல்லை. —பர். சான்சன்.

0 ஒருவன் நல்ல அறிவுரைகளை ஏற்றுக்கொள்வது, அவன் தன்னுடைய திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வழியேயாகும். —கதே,

0 மாந்தர்கள் பார்வையில் காணப்படுவதைப் போல், உண்மையில் இருக்க வேண்டும். உண்மையில் இருக்கமுடியவில்லையென்றால் ஒருவகையாயும் தோன்றாமல்இருக்கவேண்டும். —சேக்சுபியர்.

0 முயற்சி செய்துகொண்டேயிருந்தால், நம் உறுப்புகளும் அறிவும் துருப்பிடிக்காமல் இருக்கும். —சி. சிம்மன்சு.

0 பிறரோடு கூடிப் பழகி, மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இவ்வுலகம், ஒளிமிக்க பகற் காலத்தும் இருளில் மூழ்கிக் கிடப்பதாகும். —திருவள்ளுவர்.

0 பட்டறிவைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்க முடியாது; ஒரு மாந்தன் மற்றொருவனுடைய துன்பத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியாது. —நார்ட்டன்.

0 ஆழ்ந்து கருதி, ஆராயாதவர்கள், வாயால் உளறிக்கொண்டே இருப்பார்கள். —செரிடன்.

0 எவ்வளவுக் கெவ்வளவு தீயவனாயிருக்கின்றானோ, அவ்வளவுக் கவ்வளவு துன்பங்கள் அடைகின்றான். —பிளேட்டோ.

உங்கள் பெயர் இவற்றுள் ஒன்று?

உடனே தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ளுங்கள்!

வடமொழிப்பெயர் - தமிழ்ப் பெயர்

கருணாநிதி — அருட்குவை
தயாநிதி — அருட்செல்வன்
கருணாகரன் — அருளாளன்
கமலாகரன் — தாமரைமணாளன்
ஹரிஹரன் — மால்மணாளன்
தினகரன் — கதிரவன்
மனோகரன் — உளங்கவரழகன்
பாஸ்கரன் — பரிதி
சுப்ரமண்யம் — முருகன்
பாலசுப்ரமண்யம் — இளமுருகன்
சிவசுப்ரமண்யம் — சிவமுருகன்
ராமசுப்ரமண்யம் — எழில் வேலன்
குமார் — குமரன்
சுகுமார் — நற்குமரன்
ராஜகுமார் — இளவரசன்
ஜயகுமார் — வெற்றிக்குமரன்
மோகன்குமார் — எழிற்குமரன்
உதயகுமார் — எழுங்குமரன்
சிவகுமார் — சிவக்குமரன்
சங்கர்குமார் — சிவக் குமரன்
பிரேம்குமார் — அன்புக்குமரன்
ரத்தினகுமார் — குமரமணி
ரத்தினம் — மணிய(ப்ப)ன்
ஜீவரத்தினம் — மணிவாணன்
ராஜரத்தினம் — மணியரசன்
ராமரத்தினம் — மணிபழகன்
நாகரத்தினம் — நாகமணி
சந்திரன் — மதி
ரவிச்சந்திரன் — கதிர்மதி
பாலச்சந்திரன் — இளமதி
ராமச்சந்திரன் — நிலவழகன்
ஜெயச்சந்திரன் — மதிவென்றி
வலலபன் — வல்லவன
சுப்பராயன் — நல்லையன்
ஸ்ரீநிவாஸன் — திருவாணன்

வடமொழிப்பெயர் - தமிழ்ப்பெயர்

கனகா — பொன்னி
குணபூஷணி — பண்பணி
பத்மபூஷணி — பூவணி
கனகபூஷணி — பொன்னணி
ராணி — அரசி
இந்திராணி — மதியரசி
உஷாராணி — திருவரசி
செல்வராணி — திருவரசி
உமாராணி — உமையரசி
விஜயராணி — வெற்றியரசி
கலாராணி — கலையரசி
காந்திமதி — மதியொளி
இந்துமதி — நிலாமதி
பானுமதி — கதிர்மதி
சுமதி — நன்மதி
சந்திரமதி — மதிநிலா
அம்புஜம் — தாமரை
கனகாம்புஜம் — பொற்றாமரை
ஹேமாம்புஜம் — பொற்றாமரை
ஈஸ்வரி — இறைவி
பரமேஸ்வரி — பேரிறைவி
ராஜேஸ்வரி — இறையரசி
ராஜராஜேஸ்வரி — பேரிறையரசி
கவிதா — பாவேந்தி
கீதா — இசைமொழி
வஸந்தா — வேனிலி
சந்திரகாந்தா — மதியொளி
மாலதி — கங்குலி
ஜெயந்தி — வென்றி
ஆனந்தி — மகிணி
வஸந்தி — வேனிலி
ஜோதி — ஒளி
சுகந்தஜோதி — நன்மணவொளி
ஆனந்தஜோதி — இன்பஒளி
ரேணுகா — எழிலி

தொகுப்பு:

-கதிர்-சுப்பையன்.-

தொடர் : 7

பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

3. எண்

எண் என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். ஒருமை (ஒன்று), பன்மை (பல) என எண் இருவகைப் படும். எழுவாய் ஒருமையாக இருப்பின் அதனோடு தொடர்புடையவை யாவும் ஒருமையாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு இன்றி ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் மாறி அமைவது பிழையாகும்.

அதுதான் — ஒருமை
அவைதாம் — பன்மை
அவன் தன்னுடைய — ஒருமை
அவர் தம்முடைய — பன்மை

என்று வரும். 'அவை தான்' என்றும், 'அவர் தன்னுடைய' என்றும் வருவது பிழையாகும்.

'ஏதேனும் இரண்டு' என்பது பிழை. அதனை 'எவையேனும் இரண்டு' என்று திருத்தமாய் எழுதல் வேண்டும். 'ஆறுகள் தொடக்கத்தில் சிறியதாய் இருக்கும்' என்பது பிழை. ஆறுகள் தொடக்கத்தில் சிறியனவாய் இருக்கும்' என்று திருத்தமாய் எழுத வேண்டும்.

உயர்திணை உம்மைத்தொகை பலர்பால் ஈறு கொள்ளும். கபிலபரணர் என்றும், சேர சோழ பாண்டியர் என்றும் வரும். மூவேந்தன் என்னும் தொடர் பிழையானதாகும். மூவேந்தர் என்பதே திருத்தமான வடிவம்.

'ஔவையார் கல்வி அறிவு ஒழுக்கத்தில் சிறந்தவர்' என்பதில் உள்ள ஒழுக்கத்தில் என்பதை மாற்றி, ஒழுக்கங்களில் என்று பன்மையாய் எழுதல் வேண்டும்.

அவை என்பதே பன்மை. ஆதலின் அவைகளோடு, அவைகளை என்பவற்றை அவற்றோடு, அவற்றை என்று எழுத வேண்டும். இது எல்லாம், நம்மதெல்லாம், என்பதெல்லாம் ஆகிய வற்றை இவை எல்லாம், நம்மவை எல்லாம், என்பவை எல்லாம் என்று திருத்தி எழுத வேண்டும்.

மன்னன் அமைச்சரோடும் புலவரோடும் வீரரோடும் வந்தனர் என்பது பிழை. மன்னன் என்னும் ஒருமை வந்தான் என்னும் ஒருமை கொண்டே முடிதல் வேண்டும்.

பன்மைக்கும் உயர்வுப் பன்மைக்கும் வேறுபாடு உண்டு. அவர் இருக்கிறார் என்பது உயர்வுப் பன்மை. அவர்கள் இருக்கின்றனர் என்பது பன்மை. இருக்கின்றனர் என்பது பன்மைக்கு உரிய சொல்லாக வழங்குகின்றது. இதனை உயர்வுப் பன்மைக்கு வழங்குதல் தவறு.

எல்லாம் என்பது முழுவதும் என்னும் பொருளில் வரின் பன்மை வினை தேவையில்லை. 'உடம்பு எல்லாம் நொந்தன' என்று எழுதாமல் 'உடம்பு எல்லாம் நொந்தது' என்றே எழுதல் வேண்டும்.

பன்மைக்குக் 'கள்' விகுதி வேண்டாத இடங்கள் சில உள்ளன. காசு, பொன், மணங்கு, போன்றவை பன்மையாய் வரினும் 'கள்' விகுதி பெறுவதில்லை.

பத்துக் காசு தந்தான்.
நூறு பொன் எடுத்துவா.
எட்டு மணங்கு எடைபோடு.

என்று வரும்.

'கடவுள் தொட்டவுடன் கற்கள் எல்லாம் தங்கங்களாக மாறின' என்பதில் 'தங்கங்களாக' என்பதைத் 'தங்கமாக' என்று எழுதுதல் வேண்டும்.

பன்மைக்குக் 'கள்' விகுதி சேர்க்க வேண்டும் என்னும் இலக்கண நெறியை நினைவில் கொண்டு சிலர் மிகுதியாகக் 'கள்' விகுதியைச் சேர்த்து எழுதுகின்றனர். இதனால் சொற்றொடரின் இனிய ஓசை கெடுகின்றது. 'மாணவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்' என்று எழுதுவதை, 'மாணவர் தம் வீட்டிற்குச் சென்றனர்' என்று எழுதலாம்.

4. இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றாகும். இம் மூன்றும் கலந்து எழுவாய் வரின், தன்மைப் பன்மை வினை பயனிலையாய் வரும்.

நானும் நீயும் படித்தோம்.
நானும் நீயும் அவனும் படித்தோம்.

என்று வரும். 'ஒடு' என்னும் மூன்ரும் வேற்றுமை உருபால் ஒரு சொல் பிரிந்து எழுவாயாக நிற்குமாயின் அந்த எழுவாய்க் கேற்ற வாறு வினைச்சொல் அமையும்? நாங்கள் என்னும் சொல் முன்னிலை யாரை விலக்கும்.

நீ போ, நாங்கள் இருக்கிறோம்.

என்று வரும். நாம் என்பது முன்னிலையாரையும் உளப் படுத்தும்.

நீயும் வா; நாம் எல்லாரும் சேர்ந்து போகலாம் என்று வரும்.

(தொடரும்)

---

0 உனக்கு நேர்ந்த துன்பங்களையும், துயர் நிறைந்த பட்டறிவு களையும் மறந்து விடு. ஆனால் அவை கற்பித்த நெறிமுறையை மறந்து விடாதே. —பிட்டி.

0 நல்ல தூக்கம் தூங்குவதற்குத் தூய்மையான மனச்சான்றைப் போல் உதவும் ஏந்தான தலையணை வேறு எதுவும் இல்லை. —யாரோ.

0 சாணியும், குப்பையும் நிறைந்த இந்த நிலத்திலிருந்து மிக அழகான செடிகொடிகள் தோன்றுவதைப் போலத்தான் துன்பங்களைத் தரும் புரட்சியிலிருந்து புது வாழ்வு மலர்கிறது. —நெப்போலியன்.

0 நமது பகைவர்களை விரும்புமளவுக்கு நாம் பெருந்தகைகளாக இல்லாமலிருக்கலாம். ஆனால் குறைந்த அளவு நம் உடல்நலம், மகிழ்ச்சி இவற்றுக்காக வேனும் அவர்களை மன்னித்து மறந்து விடுவோம். —டேல் கார்னெகி.

0 பகைவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவன் உன்னை மன்னிப்பதும் இல்லை மறப்பதும் இல்லை. —காந்தி.

0 காலம் என்னும் மாபெரும் ஆழியின் நடுவே அமைக்கப் பெற்ற கலங்கரை விளக்குகளே புத்தகங்கள். —விப்பிள்

தொகுப்பு: கதிர்மதி (இரா. பானுமதி)

யாரென்று கூறுங்கள்!

நா. மதிவாணன்.

அறிஞர்களின் வரலாறு நமக்குப் படிப்பினையாகவும், வழி காட்டியாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு செய்தியும் வரலாருகின்றது. நீங்கள் எத்தனையோ வரலாறுகளைப் படித்திருப்பீர்கள்; சுவைத்திருப்பீர்கள். அவ் வரலாற்றுத் தலைவனை உங்கள் வழிகாட்டியாகவும் தேர்ந்தெடுத்திருப்பீர்கள். இங்கே தலைவர் சிலரின் வரலாற்றுத் துளிகளைக் கொடுத்துள்ளேன். அதைக் கொண்டு அவர்கள் யார், என்று கூறுங்கள்.

பகுத்தறிவின் விளக்கு; அவ் விளக்கிற்கு உலகம் அளித்தது நச்சுக் கோப்பை. அவ் வறிஞரை ஒரு முறை 'ஓய்வின்றிப் படித்துக் கொண்டேயிருக்கின்றீர்களே, அதனால் உங்கள் கண்ணொளிக்கு ஊறு விளையாதோ?' என்று சிலர் கேட்டனர். அதற்கு அவ்வறிஞர், 'என் உள்ளொளி உரம் பெற்றிருக்கும் வகையில், என் கண்ணொளியைப் பற்றி நான் கவலைப்பட வில்லை' என்று பகர்ந்தார். அக் கருதியலறிஞர் யார்?

0 0 0

இன வேற்றுமையை ஒழிக்கப் பாடுபட்டவர்; நோபல் அமைதிப் பரிசு பெற்ற அண்ணல்; அண்ணலின் அருள் நெறியில் பற்றுக் கொண்டவர். அவரின் இளமைக் கால நிகழ்ச்சியில் ஒன்று:

சிறுவனின் அன்னையார் ஒரு வெள்ளையர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். அச் சிறுவன் தன் தாயைக் காண அவ் வெள்ளையர் இல்லம் சென்றான். அவ் வில்லத்தில் இருந்த சிறுவர்கள், அச் சிறுவனை உணவருந்த வீட்டிற்குள் அழைத்தனர். ஆனால் அவ் வெள்ளைச் சிறுவனின் தாயார் வீட்டின் கதவை அடைத்து விட்டு, சிறுவனை வீட்டின் பின் புறம் வரும்படி பணித்தாள். அச் சிறுவன் பின்புறம் செல்ல அவ் வெள்ளை மாது, ஓர் உரொட்டித் துண்டைச் சிறுவனிடம் கொடுத்தாள். அச் சிறுவன் 'தான், கீழ் இனத்தவனாத லால்தான் தன்னை அவ் வீட்டினுள் செல்ல, அம்மாது இடந்தர வில்லை' என்பதையுணர்ந்தான். தனக் களிக்கப்பட்ட அவமானத் தால் வீறு கொண்டு, அந்த உரொட்டித் துண்டை வீசி யெறிந்து விட்டு தன் வீடு நோக்கி ஓடினான். அச் சிறுவன் யார்?

0 0 0

தோல்வி காணுத வல்லவன்; மிகக் குறுகிய வாணுளிலேயே தன் வாழ்வை முடித்துப் பெரும் புகழ் எய்தியவன். அவன் தன் உடைமைகளை, நண்பர்களுக்கு வாரி வழங்கினுன். அப்போது அவனுடைய நண்பனெருவன் "எல்லாவற்றையும் இவ்வாறு வாரி வழங்கி விட்டாயே, உனக்கென நீ என்ன வைத்துள்ளாய்?" என்று வினவினுன். அம் மொழி கேட்ட அவ் வல்லவன், தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டி, 'நம்பிக்கை' என்று உரைத்தான். அம் மறவன் யார்? 0 0 0

அன்புள்ளம் கொண்ட அறிவியலறிஞர் ஒருவர். ஒரு முறை அவர் அரசு அறப் பண்டுவச் சாலையில் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்களுள் ஒரு சிறுமி முழங்கை ஒடிந்து படுக்கையில் இருந்தாள். அச் சிறுமிக்கு அவ் வறிஞரே மருந்திட்டுப் பண்டுவம் செய்து வந்தார். அச் சிறுமி அன்றிலிருந்து தன் நோய் நீங்கப் பெற்றுப் படிப்படியாக நல மடைந்து வந்தாள். ஒரு நாள் அச் சிறுமி தன் தலையணையின் கீழ் வைத்திருந்த, ஒரு துணிப் பொம்மையை எடுத்து அவ் வறிஞரிடம் கொடுத்து, 'இதன் கால் உடைந்து போயிருக்கிறது; உள்ளேயிருந்து மரத்தூள் வெளி வருகின்றது இதற்கும் பண்டுவம் செய்யுங்கள்' என்ருள். உடனே அவ் வறிஞர் அவ் விடத்திலேயே அமர்ந்து அப் பொம்மையைத் தைத்துக் கொடுத்தார். அறிஞரும், சிறுமியும் மகிழ்ந்தனர். அவ்வன்புளங் கொண்ட அறிஞர் யார்?

0 0 0

ஆங்கிலத்தில் தலை சிறந்த கதையாசிரியர் ஒருவர். பிற்காலத்தில் அவரின் புதினங்கள் சுவை வாய்ந்திருந்தன. அவர், பள்ளியில் பயிலும் போது கல்வியில் கடை மாணுக்கராகவே இருந்தார். இதனுல் அவர் தம் ஆசிரியர்கள் அவரை 'முட்டாள் மூளை' என்று கூறி ஒரு மூலை இடத்திலேயே அமரச் செய்தனர். பின்னர் தலை சிறந்த எழுத்தாளன் ஆன பிறகு, அப் பள்ளிக்கு ஒரு முறை சென்ற போது, தான் முன்னர் உட்கார்ந்திருந்த அம் மூலையில் ஒரு சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டு, இரக்கமுற்று, அவனிடம் ஒரு 'பவுன்' காசைக் கொடுத்து 'நானும் ஒரு காலத்தில், இம் மூலையில்தான் உட்கார்ந்திருந்தேன். நீ இனிமேல் உறுதியுடன், ஊக்கத்துடன் படி. என் போல் நீயும் ஆகலாம்' என்று வாழ்த்துக் கூறிச் சென்ருர். அந்த எழுத்தாளர் யார்?

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

உங்களுக்குத் தெரியுமா?

—நா. மதிவாணன்.

க. கருவிலுள்ள குழவிக்குக் கை விரல்கள் முதலில் உண்டாகுமா? கால் விரல்கள் முதலில் உண்டாகுமா?

உ. ஒரு கன அடி நீர் எத்தனைக் கன அடி பனிக்கட்டியாக விரிவடையும்?

ங. உடுக்கள் ஏன் மின்னுகின்றன?

ச. குருதியில் 1 கன பகாயிரஞ்சீரடி(மி.மீ.) எத்தனைச் சிவப்பணுக்கள்? எத்தனை வெள்ளணுக்கள் இருக்கும்?

ரு. குருதி உடலிலிருந்து வெளியேறியதும் ஏன் உறைந்து போகிறது?

சு. 'நெரி கட்டுதல்' என்றால் என்ன?

எ. உள்ளிழுக்கும் மூச்சில் நீராவியும், வெப்பமும் மிகுதியா? வெளிவிடும் மூச்சில் நீராவியும், வெப்பமும் மிகுதியா?

அ. கானல் நீர் எவ்வாறு உண்டாகிறது?

விடைகள் ;

க. கை விரல்கள் தாம் முதலில் உண்டாகும்.

உ. ஒரு கன அடி நீர் 1.09 கன அடி பனிக் கட்டியாக விரிவடையும்.

ங. உடுக்கள் உண்மையில் மின்னுவதில்லை; உடுக்களிலிருந்து வரும் ஒளி, அலையும் காற்றினுள் புகுந்து வரும் போது, சில நேரங்களில் உடுக்கள் தெரியும்; சில நேரங்களில் தெரிவதில்லை; இதுவே நமக்கு உடுக்கள் மின்னுவது போல் தெரிகிறது.

[முன்பக்கத் தொடர்ச்சி]

உங்கள் வாழ்விலும் இவ்வாறு சிற்சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம். அவையும் ஒரு காலத்தில் ஏன் புகழடையக் கூடாது? முன்னர் கூறப்பட்ட ஐந்து அறிஞர்கள் யார் யாரென்று இன்னும் அறிய முடியவில்லையா? அறிய முடியா விட்டால் 16–ஆம் பக்கம் பாருங்கள்.

உலகிலிருந்து இரு நூறு கற்களுக்கு உயரே காற்றில்லை யாதலால், ஆங்கு உடுக்கள் மின்னுவதை நாம் காண இயலாது.

௪. குருதியில் 1 கன பகாயிரஞ்சீரடி (மி.மீ) 5000000 சிவப் பணுக்களும், 5000 வெள்ளணுக்களும் உள்ளன.

௫. நம் உடலில் வெட்டுப்பட்டதும் குருதி வெளியேறு கிறது; அக் குருதியின் மீது காற்றுப் பட்டதும், 'பிளாசு' மாவிலுள்ள 'வைப்ரினேசன்' என்ற பொருள் 'வைப்பிரின்' என்ற பொருளாக மாறுகிறது. வைப்பிரின் நார் போன்ற பொருளாக மாறி வலை போல் பின்னிக் கொள்கிறது. இவ் வலையினுள் சிவப்பு, வெள்ளை அணுக்கள் அடைபட்டுக் கட்டிப் பொருளாக உறைகின்றன; அதனால் குருதி கட்டி போன்ற நிலையை அடைகிறது. இதுவே 'குருதி உறைதல்' நிகழ்ச்சியாகும்.

உயிருணு ஓ (VitamiuK) குறைந்தால் வெட்டுப்புண் உண் டாகும் போது குருதி எளிதில் உறையாது.

௬. உடலில் காயங்கள் பட்டதும், அதன் வழியே நோய் அணுக்கள் நிண நீருடன் உடலினுள் புகுந்து விடும். இந் நோய் அணுக்களை வெளியேற்ற ஆங்குள்ள நிணநீர்ச் சுரப்பிகள் சுறுசுறுப் பாக ஈடுபடுவதால், ஆங்கு வீக்கமும், வலியும் ஏற்படுகிறது; இதையே 'நெரி கட்டுதல்' என்கிறோம்.

௭. வெளி விடும் மூச்சில் தான் நீராவியும், வெப்பமும் மிகுதி.

௮. பகற் காலத்தில் ஞாயிற்றொளியால் நிலம் மிக்க வெப்ப மாக இருக்கும்; இதனால் நிலத்திற்கு மேலுள்ள வளிமண்டலம் வெப்பத்தால் விரிவடைகிறது. வளியின் அடர்த்தியும் குறைகிறது. இவ் வெப்பத்திற்குத் தக்கவாறு வளி மண்டல அடர்த்தி குறையும்.

தொலைவான இடங்களிலிருந்து, உயரமான பொருள்களின் ஒளிக்கதிர்கள் கீழ் நோக்கி வரும்போது, அடர்மிகு வளி மண்டலத் திலிருந்து, அடர்குறை வளி மண்டலத்தினுள் நுழையும். அப்போது காற்றில் ஒளி பன்முறை விலகலடைந்து, முடிவாக முழுப் படிவ ஒளியை அடையும். இது நம் கண்களுக்கு, தொலைவில் நீர் நிலை இருப்பதைப் போன்ற பொய்த் தோற்றம் தெரியும். இத் தோற்றமே 'கானல்நீர்' எனப்படும்.

உலக மொழிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

புயர்ட்டோ ரிக்கோ:—இசுப்பானிசு, ஆங்கிலம்.
சால்வடார்:—இசுப்பானிசு.
சான்பெட்ரோ:—பிரெஞ்சு.
அமெரிக்க ஒன்றிய நாடுகள்:—ஆங்கிலம், எசுக்கிமோ, நவாகோ மோகாக்கு, செனிகா, செரோக்கீ சோக்டாவு, சியோக்சு, தெலவேர், அசீப்பிவீ.
திரினிடாடு (உடன்) துபாகோ:—ஆங்கிலம்.
(Trinidad and Tobago)
உருகுவே:—இசுப்பானிசு.
பால்க்குலாந்து தீவுகள்:—ஆங்கிலம், இசுப்பானிசு.
சிலி:—இசுப்பானிசு, குயூச்சுவா.
ஈக்குவடார்:—இசுப்பானிசு, குயூச்சுவா, ஐமாரா.
சமைக்கா:—ஆங்கிலம்.

ஆசுத்திரேலியா

ஆசுத்திரேலியா:—ஆங்கிலம்
அவாயன் தீவுகள்:—பாலினீசியன், சப்பானி, தாகலாக்கு, சீனம், ஆங்கிலம்.
கில்பெர்ட்டு, எல்லிசு தீவுகள்;—பாலினீசியன், ஆங்கிலம்.
குவாம்.—ஆங்கிலம், இசுப்பானிசு.
கரோலின், மார்சல், மரியானு தீவுகள்:—பாலினீசியன், ஆங்கிலம்.
கூக் தீவுகள்:—மவோரி, ஆங்கிலம்.
நியுகினியா:—ஆங்கிலம்.
நியுசிலாந்து:—மவோரி, ஆங்கிலம்.
நியுகாலிடோனியா:—மெலனீசியன், பிரெஞ்சு.
நியுஎர்பீரைட்சு:—பிரெஞ்சு, ஆங்கிலம்.
நார்போல்க்கு:—ஆங்கிலம்.
கிழக்கு சமோவா:—சமோவன், ஆங்கிலம்.
மேற்கு சமோவா:—சமோவன், ஆங்கிலம்.
சாலமான் தீவுகள்:—மெலனீசியன், பாலினீசியன், ஆங்கிலம்.
தோங்கா:—பாலினீசியன், ஆங்கிலம்.
பிசி:—பிசி, சீனம், ஆங்கிலம்.

[முற்றும்]

யாரென்று கூறுங்கள் – விடை:

முறையே அவ் வறிஞர்கள்: சாக்ரடீசு, மார்ட்டின் லூதர் கிங், அலெக்சாண்டர், இலிசுடர் பெருமகன், பர். வால்டர் இசுகாட்.

0 0 0

தமிழ்ச் சொல் வளம்.

நிலத்திணைத் தொகுப்பு வகை:

செய் — நெல், கரும்பு முதலிய பயிர்த் தொகுதி.
தோட்டம் — மிளகாய், கத்தரி முதலிய செடித் தொகுதி.
தோப்பு — மா, தென்னை முதலிய மரத்தொகுதி.
காடு — முல்லை, குறிஞ்சியிலுள்ள நிலத்திணைத் தொகுதி.
அடவி — மரம் அடர்ந்த காடு.
சோலை — மரம் அடர்ந்த இயற்கைத் தோப்பு.
கா — காக்கப்படும் சோலை.
கானல் — கடற்கரைச் சோலை.
வனம் — மக்கள் வழக்கற்ற காடு.

செய் வகை:

முதை — பழங் கொல்லை.
இதை — புதுக் கொல்லை.
புன்செய் -- சிறிது பண்படுத்தப் பட்ட நிலம்.
நன்செய் -- நன்ருய்ப் பண்படுத்தப் பட்ட நிலம்.
புறவு -- முல்லை நிலம்.
கொல்லை -- முல்லை நிலத்துப் புன்செய்.
புனம் — குறிஞ்சி நிலத்துப் புன்செய்.
வானவாரி (மானமாரி) -- மழை பெய்து விளையும் நிலம்.

நில வகை:

புறம்போக்கு – பண்படுத்தப் படாத அரசியலார் நிலம்.
தரிசு – பயிர் செய்யப் படாது புல் முளைத்துக் கிடக்கும் நிலம்.
சிவல் – சிவந்த நிலம்.
கரிசல் – களிமண் நிலம்.
முரம்பு – கன்னிலம் அல்லது சரள் நிலம்.
சுவல் – மேட்டு நிலம்.
அவல் – பள்ளமான நிலம்.

நன்செய் வகை:

வயல் – வைத்துப் போற்றப்படும் நிலம்.
கழனி – போரடிக்கும் களமுள்ள வயல்.
பழனம் – பழைமையான வயல்.
பண்ணை – பள்ளமான வயல்.
செறு – சேறு செய்யப்பட்ட வயல். [தொடரும்]

(பாவாணர் — சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

தொடர்: 4

கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர் தொடர்ச்சி:—

கிறித்துவப் பெயர்	அது,எந்த மொழி	அதன் பொருள்	அதற்கேற்ற தமிழ்ப்பெயர்
பர்ட்டன் Burton	ஆங்கில சாக்சானியம்	ஒளி நிறைந்த புகழ்	புகழொளி
பைரன் Byron	பிரஞ்சு	மந்தையிலிருந்தவன் (அல்) கரடி	நிரையோன்
கமரோன் cameron	கெல்திக்	வளைமுக்கு	வளைமுக்கோன்
கால்வின் calvin	இலத்தீன்	சொட்டை	சொட்டையன்
சார்லசு charles	தியுத்தானியம்	மாந்தன்	மாந்தன்
கிளாரன்சு clarence	ஆங்கில சாக்சானியம்	ஒளிமிக்க	ஒள்ளியோன் ஒளியோன்
கிளார்க் clark	இலத்தீன்	மேதைத்தனமான	அறிவோன் சான்றோன்
கிளிமெண்ட் clement	,,	அமைதியான அன்பான இரக்கமுள்ள	அமைவோன் வள்ளியோன்
கான்சுடான்டின் Constantine	,,	அலைவற்ற	அலைவறுவோன் நிலையோன்
காசுமா cosmo	கிரேக்கம்	புடவி ஒழுங்கான	புடவியோன் நிரலோன்
கிரிசுபின் Crispin	இலத்தீன்	நெளிகுழல்	சுரிகுழலோன்
கல்பர்ட் Culbert	தியுத்தானியம்	அறிவோன்	அறிவோன்
சைரசு Cyrus	பெர்சியன்	அரியணை	அரியணையோன்

(தொடரும்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.